# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் பண்ணாரி – 638401

## சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்.

## தொலைபேசி 04295 – 243289

### மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ( இரண்டாவது அழைப்பு )

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலுக்கு பசலி 1432க்கு (01.07.2022 முதல் 30.06.2023 முடிய) சப்ளை செய்ய கீழ்கண்ட விவரப்படியான வரிசை எண் 1முதல் 8முடிய உள்ள பலவகை கொள்முதல் இனங்களுக்கான மூடி முத்திரையிடப்பட்ட மறு ஒப்பந்தப்புள்ளி 10.06.2022ம் தேதி முற்பகல் 11.00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே நண்பகல் 12.00 மணியளவில் திருக்கோயில் மண்டபத்தில் இலாகா அதிகாரிகள், இவ்வாலய பரம்பரை அறங்காவலர்கள், ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் மறு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும். பலவகை கொள்முதல் இனங்கள் சப்ளை செய்தல் பணிக்கான ஒப்பந்தப் படிவங்கள் 25.05.2022 முதல் 09.06.2022 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை இத்திருக்கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பசலி 1432க்கு இத்திருக்கோயிலின் பயன்பாட்டிற்கு தேவையான 1 முதல் 8 வரை உள்ள பலவகை கொள்முதல் இனங்கள்**

| | |
|---|---|
| 1. | தினசரி பூசை சாமான்கள் சப்ளை செய்தல். |
| 2. | பால், தயிர் சப்ளை செய்தல். |
| 3. | தங்கரத புறப்பாடு செய்யும் கட்டளைதாரர்களுக்கு பிரசாதம் வழங்க தேவைப்படும் பொருட்கள் சப்ளை செய்தல். |
| 4. | பக்தர்களுக்கு முடி நீக்கம் செய்யும் பிளேடுகள் சப்ளை செய்தல் |
| 5. | கோசாலை பசுக்களுக்குத் தேவையான வைக்கோல், சோளத்தட்டு, பச்சைப்புல், அகத்திக்கீரை சப்ளை செய்தல். |
| 6. | அன்னதானத்திட்டத்திற்கு விறகு சப்ளை செய்தல். |
| 7. | வாழை இலை சப்ளை செய்தல். |
| 8. | இத்திருக்கோயில் அலுவலக உபயோகத்திற்கு தேவையான பதிவேடுகள், படிவங்கள், கட்டணச்சீட்டுகள், அன்னதானத் திட்டத்திற்கு தேவையான பதிவேடுகள் மற்றும் இதர வகையறாக்களை அச்சிட்டு சப்ளை செய்தல். |

**இனம் – 1**

| வ. எண் | பொருட்கள் விவரம் | பொருட்களின் தோராய தேவை (எண்ணிக்கை / அளவு) | ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | தேங்காய் (சுற்றளவு 30 செ.மீ) | 9,000 நெ | 15,000/– |
| 2. | வாழைப்பழம் ( எடை 60 கிராம்) | 40,000 நெ | |
| 3. | வெற்றிலை | 8,000 நெ | |
| 4. | இளநீர் (சுற்றளவு 45செ.மீ) | 2,000 நெ | |
| 5. | பாக்கு (வெட்டுப்பாக்கு ) | 5,000 கி.கி | |
| 6. | நைஸ் விபூதி (100 கிராம் பாக்கெட்) | 100. 000 கி.கி | |
| 7. | பன்னீர் பாட்டில் ( 200 மில்லி ) | 300.000 (லி) | |
| 8. | சந்தனம் பவுடர் (டி.எஸ்.ஆர். 50 கிராம் பாக்கெட்) | 20. 000 கி.கி | |
| 9. | ஊதுபத்தி ( 10 குச்சிகள் ) | 2000 பாக்கட்டுகள் | |
| 10. | திரி | 20.000 நெ | |

**இனம் – 2**

| | | | |
|---|---|---|---|
| 1. | பால் (திருவிழா உட்பட) | 1000.000 லிட் | 2,000 /– |
| 2. | தயிர் (திருவிழா உட்பட) | 500.000 லிட் | |

**இனம் – 3**

| | | | |
|---|---|---|---|
| 1. | பித்தளை காமாட்சியம்மன் விளக்கு | 1000 | ரூ. 5,000/– |
| 2. | பரிவட்டம் | 1000 | ரூ. 5,000/– |
| 3. | கட்டை பை | 1000 | ரூ. 5,000/– |
| 4. | எவர்சில்வர் டப்பா | 1000 | ரூ. 5,000/– |
| 5. | அம்மன் படம் 12 க்கு 8 லேமினேசன் படம் | 1000 | ரூ. 5,000/– |

**இனம் – 4**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜில்லட் வில்கின்சன்(Gillette Wilkinson) | 1000 | ரூ. 5,000/- |

**இனம் – 5**

| | | | |
|---|---|---|---|
| 1. | வைக்கோல் | 10000 கிலோ | ரூ. 5,000 /- |
| 2. | சோளத்தட்டு | 10000 கிலோ | |
| 3. | பச்சைப்புல் | 5000 கிலோ | |
| 4. | அகத்திக்கீரை | 5000 கிலோ | |

**இனம் – 6**

| | | | |
|---|---|---|---|
| 1. | விறகு சப்ளை செய்யும் பணி ( திருவிழா உட்பட) | 80 டன் | ரூ. 5,000 /- |

**இனம் – 7**

| | | | |
|---|---|---|---|
| 1. | வாழை இலை சப்ளை செய்யும் பணி (திருவிழா உட்பட) | 50000 | ரூ. 5,000 /- |

## இனம் 8 அச்சிடுதல்

| | **பதிவேடுகள், படிவங்கள், கட்டணச்சீட்டுக்கள், அன்னதான திட்டத்திற்கு தேவையான பதிவேடுகள் மற்றும் இதர வகையறாக்கள் அச்சிடுதல் விவரம்** | | ரூ 10,000/- |
|---|---|---|---|
| வ. எண் | அச்சிடப்பட வேண்டிய இனங்கள் | தோராய தேவை எண்ணிக்கை அளவு | பக்கங்கள் |
| 1. | முதலீடு பதிவேடுகள் (லெதர் பைண்டிங்) | 3 | 100 |
| 2. | ரொக்கப்பதிவேடு (லெதர் பைண்டிங்) | 10 | 50 |
| 3. | காசோலை பதிவேடு | 4 | 100 |
| 4. | சேமநலநிதி ரொக்கக்குறிப்பு பதிவேடு | 2 | 100 |
| 5. | தீர்மானப்பதிவேடு | 4 | 200 |
| 6. | சகாயத்தொகை தணிக்கை கட்டணம் பதிவேடு | 2 | 50 |
| 7. | கேட்பு பதிவேட்டில் காணப்படும் மற்றும் காணப்படாத இனங்கள் பதிவேடு | 2 | 100 |
| 8. | ஏலப்பதிவேடு | 20 | 100 |
| 9. | ஒப்பந்தப்புள்ளி பதிவேடு | 3 | 100 |
| 10. | குத்தகை வைப்பு பதிவேடு | 3 | 100 |
| 11. | ஒப்பந்தப்புள்ளி வைப்பு பதிவேடு | 3 | 100 |
| 12. | பலவகை வைப்பு பதிவேடு | 3 | 100 |
| 13. | காப்புக்கட்டணம் பதிவேடு | 3 | 100 |
| 14. | முன்பணப் பதிவேடு | 3 | 60 |
| 15. | கேட்பு வசூல் நிலுவைப் பதிவேடு (லெதர் பைண்டிங்) | 3 | 60 |
| 16. | உபய காணிக்கை பதிவேடு | 5 | 300 |
| 17. | வருகைப் பதிவேடு | 5 | 60 |
| 18. | வருகைப் பதிவேடு சுருக்கப்பதிவேடு | 2 | 200 |
| 19. | முறைப்பணி பதிவேடு | 2 | 60 |
| 20. | தன் பதிவேடு | 20 | 100 |
| 21. | விடுப்பு பதிவேடு | 2 | 100 |
| 22. | நடமாட்டப் பதிவேடு | 2 | 100 |
| 23. | பணியாளர்கள் சம்பளப் பதிவேடு | 3 | 200 |
| 24. | வருமானவரி/ விற்பனை வரி / தொழிலாளர் நலநிதி பிடித்தம் விவரப் பதிவேடு | 2 | 100 |
| 25. | சிறப்பூதியப் பதிவேடு | 2 | 200 |
| 26. | Pay Bill of Dept of Establishment ( TNTC 47 ) | 2 | 100 |
| 27. | மணியார்டர் பதிவேடு | 5 | 200 |
| 28. | இருப்பு பதிவேடு | 15 | 200 |
| 29. | தபால் அனுப்புகைப் பதிவேடு | 3 | 200 |
| 30. | ஓய்வு விடுதிப் பதிவேடு | 3 | 200 |

| | | | |
|---|---|---|---|
| 31. | திருமணமண்டபம் முன்பதிவு பதிவேடு | 3 | 100 |
| 32. | சத்திரம் முன்பதிவு பதிவேடு | 3 | 100 |
| 33. | கால பூஜைஅபிசேக முன்பதிவு பதிவேடு | 3 | 100 |
| 34. | தங்கரத முன்பதிவு பதிவேடு | 4 | 200 |
| 35. | தங்ககவசம் முன்பதிவு பதிவேடு | 2 | 100 |
| 36. | லாக் புக் (கார் ஜெனரேட்டர்) பதிவேடு | 3 | 100 |
| 37. | படிவம் – 22 பதிவேடு | 3 | 200 |
| 38. | படிவம் – 23 பதிவேடு | 5 | 200 |
| 39. | படிவம் – 24 பதிவேடு | 3 | 200 |
| 40. | தினசரி பூஜை மளிகை இருப்பு பதிவேடு | 5 | 100 |
| 41. | உண்டியல் பாகுபாடு பதிவேடு | 2 | 50 |
| 42. | மாணவ / மாணவியர் சேர்க்கைப்பதிவேடு | 2 | 100 |
| 43. | ஆய்வுப் பதிவேடு | 2 | 100 |
| 44. | மாணவ / மாணவியர் இயக்கப் பதிவேடு | 2 | 100 |
| 45. | பார்வையாளர் பதிவேடு | 2 | 100 |
| 46. | இரவு காவல் பதிவேடு | 5 | 100 |
| 47. | உணவுப்பொருள் தினசரி வழங்கல் பதிவேடு | 4 | 100 |
| 48. | மளிகைப்பொருட்கள் இருப்பு பதிவேடு | 3 | 100 |
| 49. | டெண்டர் படிவம் விற்பனை பதிவேடு | 4 | 100 |
| 50. | மதிப்பீடு அங்கீகாரப் பதிவேடு | 2 | 100 |
| 51. | பரிசீலணைக்கட்டணப் பதிவேடு | 2 | 100 |
| 52. | கட்டிடங்களின் வரி செலுத்துதல் பதிவேடு | 2 | 50 |
| 53. | திருமண மண்டபம் மின்கட்டணப் பதிவேடு | 2 | 50 |
| 54. | திருமண மண்டபம் முன்பணப் பதிவேடு | 2 | 200 |
| 55. | சத்திரம் முன்பணப் பதிவேடு | 2 | 200 |
| 56. | சமுதாயக்கூடம் மின்கட்டணப் பதிவேடு | 2 | 100 |
| 57. | மின்கட்டணப் பதிவேடு | 2 | 100 |
| 58. | கள்வர் எச்சரிக்கை மணி பராமரிப்பு பதிவேடு | 2 | 100 |
| 59. | கண்காணிப்பு கேமரா பராமரிப்பு பதிவேடு | 2 | 100 |

**இனம் 2 படிவங்கள்**

| வ. எண் | படிவங்கள் | தோராய தேவை எண்ணிக்கை / அளவு | தாள்கள் |
|---|---|---|---|
| 1. | வருடாந்திர ஊதிய உயர்வு படிவம் | 2 | 100 |
| 2. | செலவுச் சீட்டு | 20 | 100 |
| 3. | பயணப் பட்டியல் | 3 | 100 |
| 4. | N.M.R. படிவம் | 3 | 100 |
| 5. | டெபாசிட் திருப்புப் படிவம் | 5 | 100 |
| 6. | நிர்வாக அனுமதி படிவம் | 2 | 100 |
| 7. | மதிப்பீடு அங்கீகாரப் படிவம் | 2 | 100 |
| 8. | டெண்டர் ( Check List ) படிவம் | 2 | 100 |
| 9. | திருமண விண்ணப்பப் படிவம் | 1000 | – |
| 10. | தேவைப்பட்டியல் ( with numbering ) | 10 | 100 + 100 |
| 11. | காணிக்கை இரசீது புத்தகம் (with numbering) | 100 | 100 + 100 |
| 12. | அளவீடு புத்தகம் (with numbering) | 10 | 100 + 100 |
| 13. | ரொக்கக் காணிக்கை புத்தகம் ( with numbering ) | 50 | 100 + 100 |
| 14. | ஓய்வு விடுதி இரசீது ( with numbering ) | 50 | 100 + 100 |
| 15. | திருமணச்சான்று ( with numbering ) | 5 | 100 + 100 |
| 16. | ஒப்பந்தப்படிவம் | 20 | 100 |
| 17. | விளம்பர அத்தாட்சி | 10 | 100 |

**இனம் 3 பலவகை இனங்கள்**

| வ. எண் | பலவகை இனங்கள் | தோராய தேவை எண்ணிக்கை/ அளவு |
|---|---|---|
| 1. | கவர்கள் ( 10 ½ x 4 ½ ) | 5000 |
| 2. | கவர்கள் ( 9 x 4 ) | 5000 |
| 3. | கவர்கள் ( 6½ x 4 ½ ) | 5000 |
| 4. | ரேப்பர் சீட் ( Repper sheet ) | 1000 |
| 5. | கணினி பேப்பர் ரோல் ( 3" / 50 mt ) | 2000 |
| 6. | கணினி பேப்பர் ரோல் ( 2" / 50 mt ) | 2000 |
| 7. | கணினி பலவகை இரசீது ( A4 Size ( 100 Gsm) with numbering ) | 25000 |

**இனம் 4 கட்டணச்சீட்டுக்கள்**

| வ. எண் | கட்டணச்சீட்டுக்கள் | தோராய தேவை எண்ணிக்கை / அளவு | தாள்கள் |
|---|---|---|---|
| 1. | கட்டணச்சீட்டுக்கள் ( 10 x 100 ) தாள்கள் | 100 புக் | 100 |

**இனம் 5 அன்னதானம்**

| வ. எண் | விவரம் | தோராய தேவை எண்ணிக்கை அளவு | பக்கங்கள் |
|---|---|---|---|
| 1. | மளிகைப்பொருட்கள் இருப்புப் பதிவேடு | 5 | 50 |
| 2. | காய்கறிகள் இருப்புப் பதிவேடு | 5 | 50 |
| 3. | தினசரி அன்னதானப் பயனாளிகள் விவரப் பதிவேடு | 5 | 100 |
| 4. | அன்னதானம் முன்பதிவு பதிவேடுக | 5 | 100 |
| 5. | அன்னதான நிரந்தர கட்டளைதாரர் வைப்பு பதிவேடு ( லெதர் பைண்டிங் ) | 2 | 400 |

**நிபந்தனைகள்**

**இனம் 1 & 2**

அனைத்துக் பொருட்களும் திருக்கோயில் பூசைக்கு உகந்த தரமான பொருட்களாக இருக்க வேண்டும். தேங்காய் நன்றாக விளைந்து முதிர்ந்தவைகளாகவும், அதன் சுற்றளவு 30 செமீ அளவு உள்ளதாக இருக்க வேண்டும். வாழைப்பழங்கள் நல்ல தரமானதாகவும் அதன் எடை 60 கிராம் உள்ளதாக இருக்க வேண்டும். காலவதியான பொருட்கள் இருக்கக் கூடாது. மேலே குறிப்பிட்ட அளவிற்கு குறைவான பொருட்கள், பழங்கள் சப்ளை செய்யக்கூடாது. தரமான பொருட்களை தன் பொறுப்பில் திருப்பி எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு பதிலாக வேறுபொருட்கள் சப்ளை செய்ய வேண்டும். இளநீர் நிறைந்த நீர் உள்ளதாக இருக்க வேண்டும். அதன் சுற்றளவு 45 செ.மீ அளவு உள்ளதாக இருக்க வேண்டும். பால் தயிர் நல்ல தரமானதாகவும் Food Safety சான்றிதழ் பெற்றதாகவும் இருக்க வேண்டும். சுத்தமானதாகவும், கலப்படம் இல்லாமலும் இருத்தல் வேண்டும்.

**இனம் – 3**

**1. சப்ளை செய்ய வேண்டிய பித்தளை விளக்குகள் விவரம்**

1. உயரம் – 13. செ. மீ
2. அடிவட்ட அகலம் – 7 செ.மீ
3. மேல்வட்ட அகலம் – 9 செ.மீ
4. எடை – 300 கிராம்
5. பித்தளையின் தரம், பித்தளை விளக்கின் முன்புறம் 1 " தங்கரத அம்மன் உருவப்படம் நன்கு தெரியும் வண்ணமும் 2" அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி " என்ற எழுத்துக்களும், பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**2. சப்ளை செய்ய வேண்டிய கைத்தறி பரிவட்டங்கள் விவரம்**

1. நீளம் - 1. 83 மீட்டர்

2. அகலம் - 0. 90 மீட்டர்

3. பாவு நூல் 100ம் எண். கோம்புடு ஊடை நூல் பாலியஸ்டர் முந்தி மற்றும் பார்டர் 12 X 18 கலப்பு ஜரிகை முந்தியில் சரிகை பார்டர் போட்டு 5" அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி " என்ற எழுத்துக்களும், பார்டர் சரிகைக்கருகில் " பண்ணாரி தாயே பண்ணாரி தாயே" என்ற எழுத்துக்களுடன் "திரிசூலம் " உருவமும் எம்ராய்டரி செய்ய வேண்டும். (மாதிரி திருக்கோயிலில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்)

4. ஒப்பந்தப்புள்ளி தருபவர்கள் கைத்தறி நூற்பாலையின் ஜி.எஸ்.டி ( GST) டி.என் ( TIN) மற்றும் தொழிலாளர் துறை சான்று, நூற்பு நிலையத்தின் கியாரண்டி சான்று மற்றும் இதர சான்றுகளுன் கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி நூற்பாலை நிறுவனம் குறைந்தது 5 ஆண்டுகளாவது தொழில் நடத்தியற்கான சான்று அத்தாட்சி இணைக்கப்பட வேண்டும் .

**3. சப்ளை செய்ய வேண்டிய கட்டைப்பை விவரம்**

1. பையின் அளவு 16" X 19 ", பையின் தடிமன் 120 GSM, தரமான மூங்கில் குச்சியினால் ஆன கைப்பிடி அமைக்கப்பட்ட பண்ணாரி மாரியம்மன் திருவுருப்படம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். மறுபுறம் தங்கரதம் பொறித்தல் வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் மேற்படி கட்டைப்பை நல்லதரமானதாக இருக்க வேண்டும் .
3. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்டும் கட்டைப்பை திருக்கோயில் நிர்வாகிகளால் நன்றாக பரிசோதிக்கப்பட்டு அவைகளின் தரம் நன்றாக இருப்பதாக ஏற்றுக் கொண்டால் (பிரிவு பொறுப்பாளர்) முன்னிலையில் எண்ணிக் காண்பித்து வழங்கப்பட வேண்டும். வரப்பெற்ற பைகள் பயன்படுத்த தகுதியற்றவை என்று கண்டறியப்படும் பொழுது பைகளின் எண்ணிக்கைக்கு சமமான தரமான நெட்லான்பை தொகை ஏதும் கோராமல் ஒப்பந்தப்புள்ளிதாரர் வழங்க வேண்டும் தவறினால் தகுதியற்ற நெட்லான் பைகளின் தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

**4. சப்ளை செய்ய வேண்டிய எவர்சில்வர் டப்பாக்கள்**

அ) ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் விற்பனை வரி, வருமான வரி மற்றும் இதர வரிகள் உட்பட ½ கிலோ கொள்ளளவு உள்ள காலி எவர்சில்வர் டப்பாக்கள் (மூடி மற்றும் ஸ்பூனுடன் ) ஒன்றுக்கு தனித்தனியே விலை விவரம் குறிப்பிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி தொகையினை எண் மற்றும் எழுத்தால் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

**ஆ) ½ கிலோ கொள்ளளவு கொண்ட காலி எவர்சில்வர் டப்பாவின் அளவு விவரம்**

| | |
|---|---|
| டப்பாவின் கொள்ளளவு | - 500 கிராம் |
| டப்பாவின் தடிமன் | - 26 கேஜ் |
| டப்பாவின் விட்டம் | - 8 செ.மீ |
| டப்பாவின் தடிமன் | - 10.7 செ.மீ |
| டப்பாவின் மூடி | - மேற்படி டப்பாவில் சரியாக வேண்டும். |

டப்பா மற்றும் ஸ்பூனின் மொத்த எடை - 150 கிராம் சப்ளை செய்யும் எவர்சில்வர் டப்பாக்கள் FOOD GRADE தரம் கொண்டவையாக இருக்க வேண்டும். அதற்கான சான்றிதழ் இணைக்க வேண்டும். எவர்சில்வர் டப்பாக்கள் நன்கு சுத்தமாகவும் கழிம்புகள் போன்றவைகள் இல்லாமல் இருக்க வேண்டும். தவறினால் அதற்கு பதிலாக மாற்று டப்பாக்கள் தன் சொந்த பொறுப்பில் சப்ளை செய்ய வேண்டும். தவறினால் தகுதியற்றவற்றிக்கான தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

**5. 12 x 8 அளவுள்ள லேமினேசன் அம்மன் படம்**

12 x 8 லேமினேசன் அம்மன் படம் ஒப்பந்த உத்திரவு வழங்கப்பட்ட நாளிலிலிருந்து ஓராண்டு காலத்திற்கு சொந்த பொறுப்பில் கொண்டு வந்து சப்ளை செய்ய வேண்டும். அம்மன் படம் மாதிரி இவ்வலுவலகத்தில் உள்ளது. அதைப் பார்த்துத் தெரிந்து கொண்டு அதே தரத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் அம்மன் படம் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

**<u>இனம் 4. சப்ளை செய்ய வேண்டிய ஜில்லட் வில்கின்சன் பிளேடுகள் விவரம்</u>**

1. ஜில்லட் வில்கின்சன் பிளேடுகள் யாவும் ஒப்பந்ததாரர் தமது சொந்தப் பொறுப்பில் பண்ணாரியில் கொண்டு வந்து வழங்க வேண்டும். ஜில்லட் வில்கின்சன் பிளேடுகள் நல்ல தரமுள்ளதாகவும் குறித்த காலத்தில் தேவைப்பட்டிலின்படி வழங்கப்பட வேண்டும்.
2. ஜில்லட் வில்கின்சன் பிளேடுகள் (Gillette Wilkinson)Economy packing– இருப்பின் விரும்பத்தக்கது.

**<u>இனம் 5. கோசாலையில் உள்ள பசுக்களுக்கு பசுந்தீவனங்கள் சப்ளை செய்ய வேண்டிய விவரம்</u>**

1. நல்ல தரமான பச்சை தீவனங்கள் பசுக்களுக்கு கொண்டு வந்து சப்ளை செய்ய வேண்டும்.
2. ஒப்பந்ததாரர் தமது சொந்த பொறுப்பில் பண்ணாரியில் கொண்டு வந்து வழங்கப்பட வேண்டும்.

**<u>இனம் 6 சப்ளை செய்ய வேண்டிய விறகுகள் விவரம் ( திருவிழா உட்பட)</u>**

1. நல்ல காய்ந்த பல ஜாதி விறகுகளாக இருக்க வேண்டும்.
2. மேற்படி விறகுகளை சொந்த செலவில் எடை போட்டு திருக்கோயிலுக்கு சப்ளை செய்யப்பட வேண்டும்.
3. காய்ந்த விறகுகளை திருக்கோயில் நிர்வாகிகள் முன்னிலையில் எடை போட வேண்டும்.

**<u>இனம் 7 சப்ளை செய்ய வேண்டிய வாழை இலை விவரம் ( திருவிழா உட்பட)</u>**

1. வாழை இலை சாப்பாட்டுக்கு தேவையான தரமான சாப்பாட்டு இலை சப்ளை செய்ய வேண்டும்.

**<u>இனம் 8 பதிவேடுகள், படிவங்கள், கட்டணச்சீட்டுக்கள், அன்னதான திட்டத்திற்கு தேவையான பதிவேடுகள் மற்றும் இதர வகையறாக்கள் அச்சிடுதல் விவரம்</u>**

1. ஒவ்வொரு இனத்திற்கும் அடித்தல் திருத்தல் இல்லாமல் துல்லியமாக தொகை குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் அடித்தல், திருத்தல் இருந்தால் சுருக்கொப்பம் இட வேண்டும். ஒப்பந்தப்புள்ளியின் மேல் பகுதியில் அச்சிடும் நிறுவனத்தின் முழுப் பெயரும் விலாசமும் குறிப்படப்பட வேண்டும்.
2. திருக்கோயில் மூலம் வழங்கப்படும் ஒப்பந்தப்புள்ளி விலைப்புள்ளி படிவத்தில் அனைத்து இனங்களுக்கான விலையையும் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
3. அச்சகத்தாரரால் அச்சிட்டு வழங்கப்படும் பதிவேடுகள் அல்லது இதர வகையறாக்கள் எந்த பகுதியாவது திருப்திகரமாக இல்லாவிடில் அதை திருக்கோயில் நிர்வாகத்தின் திருப்திக்கு ஏற்றவாறு மீண்டும் அச்சிட்டு வழங்க வேண்டும்.
4. நல்ல தரமான தாளில் அழகு வேலைப்பாடுகளுடன் அமைந்த அச்சுக் கோர்வையாக அச்சிட்டு திருக்கோயில் அலுவலகத்தில் கொண்டு வந்து தமது சொந்தப் பொறுப்பில் டெலிவரி கொடுக்க வேண்டும். அச்சிடப்பட வேண்டிய இனங்களின் மாதிரிகளை முன்னரே இவ்வலுவத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும்.
5. பதிவேடுகள், படிவங்கள், இரசீது புத்தகம் அனைத்திற்கும் பக்க எண் குறிப்பிட வேண்டும். பசலிக்கு தேவையான பதிவேடுகள், படிவங்கள் மற்றும் கட்டணச்சீட்டுக்கள் தோராயமாக சப்ளை செய்ய வேண்டிய அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப கூட்டவோ, குறைக்கவோ, திருக்கோயில் நிர்வாகத்திற்கு பூர்ண உரிமையுண்டு.
6. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் பதிவேடுகள் அச்சிடுவதற்கும், படிவங்கள் அச்சிடுவதற்கும், கட்டணச்சீட்டுக்கள் அச்சிடுவதற்கும் அச்சுக்கூலி, பைண்டிங்கூலி, டெலிவரி கூலி ஆகிய அனைத்து செலவுகளையும் உள்ளடக்கி ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

## <u>பொது நிபந்தனைகள்</u>

1. மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகைகளுக்குரிய வரைவோலையினை **"The Deputy Commissioner / Executive Officer, Arulmigu Bannari Mariamman Temple, Bannari "என்ற முகவரிக்கு ராஜன்நகர் இந்தியன் ராஜன்நகர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளையில் ( குறியீடு 1023 )** செல்லத்தக்க வகையில் வரைவோலை எடுத்து இத்திருக்கோயிலிலிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும். டெண்டர் உறையின் மீது தினசரி பூசைப் பொருட்கள், தங்கரதப் புறப்பாடு செய்யும் உபயதாரர்களுக்கு பிரசாதம் வழங்க தேவைப்படும் பொருட்கள் மற்றும் பக்தர்களுக்கு முடிநீக்கம் செய்யும் பிளேடுகள், கோசாலை பசுக்களுக்கு தேவையான வைக்கோல், சோளத்தட்டு, பச்சைப்புள் சப்ளை செய்யும் பணி பதிவேடுகள், படிவங்கள் மற்றும்கட்டணச்சீட்டுகள் அச்சிட்டு சப்ளை செய்தல் இனம் எண் மற்றும் இனத்தின் பொருட்கள் பெயரை தனித்தனியே குறிப்பிட வேண்டும்.

2. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் ஜி.எஸ்.டி ( GST ) உட்பட மேற்படி இனங்களுக்கு விலை விவரம் (எண் மற்றும் எழுத்தால்) குறிப்பிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி ஒன்றின் விலை ரூ.300/– மட்டும்.

3. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்த உத்திரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு சப்ளை செய்வதாக இருக்கும் இனங்களின் மாதிரிகளை இவ்வலுவலகத்தில் காண்பிக்கப்பட வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளி உறையின் மீது பெறுநர் என்ற இடத்தில் **துணைஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி** என்ற முகவரி குறிப்பிட வேண்டும்.

5. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் ரூ.50/–க்கான முத்திரி காகிதத்தில் ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

6. திருக்கோயில் அலுவலகத்தில் அவ்வப்பொழுது ஒப்பந்தப்புள்ளிதாரரே நேரில் எழுத்து மூலம் தேவைப்பட்டியல் பெற்றுக் கொள்ள வேண்டும். தேவைப்பட்டியலிலுள்ள விவரப்படி தேவையான காலத்தில் தேவையான அளவு தேவையான நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்ட மாதிரிப்படியே தங்குதடையின்றி மேற்படி இனங்களை சப்ளை செய்ய வேண்டும்.

7. அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்யத் தவறினால், திருக்கோயில் நிர்வாகம் மூலம் வெளி மார்க்கெட்டில் நேரடியாக கொள்முதல் செய்து அதனால், ஏற்படும் கூடுதல் செலவினங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும் மற்றும் திருக்கோயிலால் பிடித்தம் செய்யப்பட்ட 5% பில் தொகையிலிருந்தும் வைப்புத் தொகையிலிருந்தும் மற்றும் பட்டியல் தொகையிலிருந்தும் மேற்படி இழப்புத் தொகை பிடித்தம் செய்யப்படும்.

8. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் இனங்கள் நல்ல தரமானதாக இருக்க வேண்டும்.

9. விசேச காலங்கள் மற்றும் பக்தர்கள் அதிகமாக வரும் காலங்களில் அதிகமான அளவு தேவைப்பட்டியலின்படி தங்குதடையின்றி தரமான மேற்படி இனங்களை ஒப்பந்தப்புள்ளியில் இணைத்திருந்த மாதிரிப்படியே சப்ளை செய்ய வேண்டும்.

10. சப்ளை செய்யப்படும் இனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது சொந்தப்பொறுப்பிலும் மற்றும் சொந்த செலவிலும் பண்ணாரி, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் அலுவலகத்திற்கு கொண்டு வந்து வழங்க வேண்டும்.

11. மேற்படி இனங்கள் பிரிவு பொறுப்பாளரால் நன்றாக பரிசோதிக்கப்பட்டு அவைகளின் தரம் நன்றாக இருப்பதாக ஏற்றுக் கொண்டால் பிரிவு பொறுப்பாளர் முன்னிலையில் எண்ணிக்கை காண்பித்து வழங்க வேண்டும்.

12. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்பட்ட இனங்களுக்குரிய காசோலை வழங்குவதில் நிர்வாக ரீதியாக ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டாலும், அந்த காலதாமதத்தை காரணம் காட்டாமல் தொடர்ந்து தேவைப்பட்டியல் பெற்று தரமான இனங்களை வழங்க வேண்டும்.

13. ஒப்பந்தப்புள்ளிதாரர் தமது சார்பாகவோ, வேறு நபர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவோ அல்லது தனது டெண்டரை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள்டெண்டர் விடவோ கூடாது.

14. ஒப்பந்தப்புள்ளிதாரர் திருக்கோயில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கும் நடைமுறை விதிகளுக்கும் சென்னை, இந்துசமய அறநிலையத்துறை, சட்ட திட்டங்களுக்குட்பட்டும் சப்ளை செய்ய வேண்டும்.

15. ஒப்பந்தப்புள்ளி இனங்கள் தேவைப்பட்டியல்படி தேவையான காலத்தில் தேவையான அளவு சப்ளை செய்யாவிட்டாலோ, அல்லது ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி நடந்து கொள்ளாவிட்டாலோ ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படும்.

16. ஒப்பந்தப்புள்ளியை காரணம் கூறாமல் ஏற்கவோ நிராகரிக்கவோ நிர்வாக அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

17. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளி இனங்கள் சப்ளை செய்வதில் இயற்கையாகவோ அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் இடையூறு ஏற்பட்டால் இதற்கு திருக்கோயில் நிர்வாம் ஏதும் பொறுப்பேற்காது.

18. இதனால் திருக்கோயிலுக்கு தேவையான ஒப்பந்தப்புள்ளி இனங்களை வெளிமார்க்கெட்டிலோ அல்லது விலைப்புள்ளிகள் பெற்றோ அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் மூலமோ கொள்முதல் செய்யப்படும். இவ்வாறு கொள்முதல் செய்வதால் திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டால் இதற்கு முன் ஒப்பந்தப்புள்ளிதாரரே பொறுப்பாக்கப்பட்டு இந்த இழப்புத் தொகையினை முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே செலுத்த வேண்டும். தவறினால் நீதிமன்றம் மூலம் நீதிமன்ற செலவுடன் வட்டியுடன் சேர்த்து வசூலிக்கப்படும்.

19. ஒப்பந்தப்புள்ளி சென்னை, இந்துசமய அறநிலையத்துறை ஆணையரவர்கள் அங்கீகாரத்திற்குட்பட்டது.

20. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஆணையரால் அங்கீகரிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிதாரர் தவிர மற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் செலுத்தியிருந்த ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

21. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளி இனங்கள் ஏற்கனவே இதர நிறுவனங்களுக்கு விநியோகம் செய்தவராக ,இருக்க வேண்டும்.

22. பசலியாண்டு தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்று அதில் ஒப்பந்தப்புள்ளி இனங்கள் கொள்முதல் செய்த வகையில் தணிக்கை ஆட்சேபணை ஏதுமில்லையென்று அறிவித்த பின்னரே ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்தியுள்ள வைப்புத்தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். தணிக்கை மேற்கொள்ள காலதாமதம் ஆகும் பட்சத்தில் ஒப்பந்தாரர் Indemnity Bond எழுதிக் கொடுத்து, அதனை நிர்வாகம் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் பிணை வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படும். திருக்கோயிலுக்கு ஏதேனும் நிதியிழப்பு ஏற்பட்டிருப்பின் அதனை பிணை வைப்புத் தொகையிலிந்து பிடித்தம் செய்து மீதித் தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

23. ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்படும் வருமான வரி ஜி.எஸ்.டி. GST மற்றும் இதர வரிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளிதாரரின் சொந்த பொறுப்பில் அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து வரிகளையும் செலுத்திக் கொள்ள வேண்டும் தவறினால் நிர்வாகம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது

24. 1432ம் பசலிக்கு சப்ளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு பசலி 1433 பசலி டெண்டர் கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும் பட்சத்தில் இதே விலைக்குத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி இனங்கள் சப்ளை செய்ய வேண்டும்.

25. எந்த நேரத்திலும் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ, அல்லது நிராகரிக்கவோ, நிபந்தனைகளை கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ, திருத்தவோ திருக்கோயில் நிர்வாகிகளுக்கு பூர்ண உரிமையுண்டு

26. ஒப்பந்தப்புள்ளி எடுத்தவர்களுக்கு ஆணையர் அனுமதி பெற்ற பின்பு தான் தொகை வழங்கப்படும்.

இங்ஙனம்

வீ. புருசோத்தமன்,
ராஜாமணி தங்கவேல்,
புஷ்பலதா கோதண்டராமன்
வீ. மகேந்திரன்
(பரம்பரை அறங்காவலர்கள்)

இரா.மேனகா
துணை ஆணையர் / செயல் அலுவலர்

இடம் : பண்ணாரி
நாள் : 24.05.2022.